## 1

# நன்மாறன் கோட்டைக் கதை

''நல்ல ஊரு சார். இங்க வேல செய்றவங்க எல்லாருமே நல்ல மாதிரியான ஆளுங்கதான். நல்லா கோஆப்ரேட் பண்ணுவாங்க. கட்சிக்காரங்க, அரசியல்வாதி, உள்ளூர்க்காரங்கன்னு யாரும் ஸ்கூலுக்குள்ளார வர மாட்டாங்க. நான் இந்த ஸ்கூலுக்கு வந்து பத்து வருசமாச்சி. எந்தத் தொந்தரவும் இல்ல. நீங்களும் ரிட்டயர் ஆவுறவரைக்கும் இந்த ஊர்லியே ஓட்டலாம் சார். நன்மாறன் கோட்டங்கிற பேருக்கேத்த மாதிரிதான் ஊரு ஆளுங்களும் இருப் பாங்க'' என்று உடற்கல்வி ஆசிரியர் தனவேல் சொன்னார்.

''அப்படியா?'' என்று ராமநாதன் கேட்டதோடு சரி.

மேல்நிலைப்பள்ளி தலைமை ஆசிரியராகப் பதவி உயர்வு பெற்று இன்று காலைதான் கடலூர் மாவட்டத்திலிருந்து வந்து புதிய பள்ளிக்கூடத்தில் ராமநாதன் சேர்ந்திருந்தார். முதல் நாளே அதிகம் கேள்விகள் கேட்க வேண்டாம். ஆசிரியர்கள் எப்படியோ, ஊர் எப்படியோ என்ற யோசனையில் அதிகமாகப் பேசாமல் இருந்தார்.

காலையில் வந்ததிலிருந்து ராமநாதனுக்கு ஒரே வேலையாக இருந்தது. ஆசிரியர்கள் வரிசையாக வந்து வாழ்த்துச் சொன்னார் கள். பணியேற்ற விவரத்தை உரிய அலுவலர்களுக்குத் தெரிவிப் பதற்கான கடிதங்களைத் தயார்செய்தார். மதியம் சாப்பிட்டார். உட்கார்ந்தே இருந்ததால் தூக்கம் வருவது மாதிரி இருந்தது. முதல் நாளே தூங்கினால் அசிங்கம் என்று நினைத்தார். கைக்கடி காரத்தைப் பார்த்தார். இரண்டேகால்.

''ஒவ்வொரு வகுப்பா பாத்திட்டு வரலாமா சார்?'' என்று கேட்டார். எதிரில் நாற்காலியில் உட்கார்ந்திருந்த தனவேல் மறுப்பு எதுவும் சொல்லாமல், ''போகலாம் சார்'' என்று சொல்லி விட்டு, போவதற்குத் தயாரான மாதிரி எழுந்து நின்றார். ராம நாதன் எழுந்து அறையை விட்டு வெளியே வந்ததும் பின்னா லேயே தனவேலுவும் வந்தார்.

''மொதல்ல ஆறாம் வகுப்பு பாத்திடலாம். எங்க இருக்கு?''

''வாங்க சார்'' என்று சொன்ன தனவேல் ராமநாதனுக்கு முன் னால் வராண்டாவில் நடக்க ஆரம்பித்தார்.

ஆறாம் வகுப்புக்குள் தனவேல் நுழைந்தார். ராமநாதனைக் கண்டதும் பாடம் நடத்திக்கொண்டிருந்த ஆசிரியை, ''வாங்க சார்'' என்று சொன்னார். மாணவர்களையும், கரும்பலகையையும் ராம நாதன் பார்த்தார். பிறகு ''நீங்க நடத்துங்க'' என்று சொல்லிவிட்டு வெளியே வந்தார். அடுத்தது ஏழாம் வகுப்புக்குள் போனார். அடுத்தடுத்து பன்னிரண்டாம் வகுப்புவரை ஒவ்வொரு வகுப்புக் குள்ளும் நுழைந்துநுழைந்து பார்த்துவிட்டு, ஒன்றிரண்டு வார்த் தைகள் மட்டும் பேசிவிட்டு வந்தார். எல்லா வகுப்புகளிலுமே ஆசிரியர்கள் பாடம் நடத்திக்கொண்டிருந்தார்கள். தனியார் பள் ளிக்கூட அமைதியைவிடக் கூடுதல் அமைதியாக இருந்தது. புதிய தலைமை ஆசிரியரின் குணம் எப்படியோ, முதல் நாளன்றே கெட்ட பெயர் வாங்க வேண்டாம் என்று எல்லா ஆசிரியர்களும் நினைத்திருக்கலாம் என்று நினைத்த ராமநாதன், பள்ளிக் கட்ட டத்தை விட்டு வெளியே வந்தார். மைதானத்தை ஒரு பார்வை பார்த்தார். என்ன தோன்றியதோ மைதானத்தைச் சுற்றிப் பார்க்க ஆரம்பித்தார். அவருக்கு இணையாக தனவேல் நடந்து கொண்டிருந்தார். பள்ளிக் கட்டடத்துக்குச் சற்றுத் தள்ளி தெற்கி லிருந்த கழிப்பறைக்கு வந்தார். உள்ளே நுழைந்து பார்த்தார். கழிப்பறை பயன்படுத்த முடியாத நிலையில் இருந்தது. மூக்கை மூடிக்கொண்டு வெளியே வந்து ''இவ்வளவு மோசமா இருக்கே. புள்ளைங்க எங்க போவும்?'' என்று கேட்டார்.

''செவத்து மறவுலேயே போயிடுங்க சார்.''

''டீச்சர்ஸுக்கு இருக்கா?''

''எச்.எம்.ரூமுக்குப் பக்கத்திலேயே இருக்கு சார்.''

''லேடீஸ் டீச்சர்ஸுக்குத் தனியா இருக்கா?''

''இல்ல சார்.''

''எங்க போவாங்க?''

''அந்த ஒரு ரூம்லதான் போவணும். யார் போனாலும் ரெண்டு ரெண்டு பேரா போவாங்க. ஒருத்தங்க உள்ளார இருந்தா, ஒருத்தங்க வெளிய காவலுக்கு நிப்பாங்க'' என்று சொன்ன தனவேல் லேசாகச் சிரித்தார்.

''நான் முன்னால வேல பாத்த ஸ்கூல்ல தனித்தனியா இருக்கும். பெரிய ஸ்கூல்'' என்று ராமநாதன் சொன்னதற்கு தனவேல் எந்தப் பதிலும் சொல்லவில்லை. 'அப்படியா?' என்றும் கேட்கவில்லை.

ராமநாதன் பள்ளிக்கூடக் கட்டடத்தையும் மைதானத்தையும் பார்த்தார். ஊருக்கு ஒதுக்குப்புறமாக, விஸ்தாரமான இடத்தில் தான் பள்ளிக்கூடம் இருந்தது. மதில் சுவர் இருந்தால் இன்னும் நன்றாக இருக்கும் என்ற எண்ணம் உண்டாயிற்று. மைதானம் முழுவதும் வெயில் படர்ந்திருந்தது. வெக்கையாக இருந்தது. வியர்த்தது. 'ஜனவரி மாதத்திலேயே நல்ல வெயிலாக இருக்கிறது' என்று சொல்ல நினைத்தார். ஆனால், சொல்லவில்லை. தனவேல் எப்படிப்பட்ட ஆள், முதல் நாளே அதிகமாகப் பேசி வம்பில் மாட்டிக்கொள்ள வேண்டாம் என்ற தயக்கம் ராமநாதனுக்கு இருந்தது. அதைப் போலவே தனவேலுக்கும் இருந்தது. பக்கத்திலிருந்த வேப்பமரத்தைப் பார்த்ததும் ''வாங்க நிழலுக்குப் போவம்'' என்று ராமநாதன் சொன்னார். இருவரும் நடந்து வேப்பமர நிழலுக்கு வந்தனர். சுற்றுமுற்றும் பார்த்தார் ராமநாதன். சாலையிலிருந்து பள்ளிக்கு வரும் வழியைப் பார்த்தார். பூண்டுச் செடிகள் மண்டிக் கிடந்தன. அதைப் பிடுங்கச் சொல்ல வேண்டும் என்று நினைத்தார். அதே மாதிரி மைதானம் முழுவதும் அங்கங்கே

வளர்ந்திருந்த செடிகளையும் பிடுங்கச் சொல்ல வேண்டும் என்று நினைத்தார். இன்றைக்கே சொன்னால் அதிகாரம் செய்கிறார் என்றாகிவிடும் என்ற பயத்தில் நாளைக்குப் பார்த்துக்கொள்ள லாம் என்று நினைத்தார். அப்போதுதான் மனதில் தோன்றிய மாதிரி ''ஏ.எச்.எம். எப்பிடி?'' என்று கேட்டார்.

''நல்ல மாதிரியான ஆளு சார். அவரால எந்தத் தொந்தரவும் வராது.''

''அப்பிடியா?'' என்று கேட்டதோடு சரி. அடுத்த கேள்வியை ராமநாதன் கேட்கவில்லை. தனவேலுவும் தானாக எதுவும் சொல்லவில்லை. இருவரும் சிறிது நேரம் பேசாமல் மைதானத் தைப் பார்த்தவாறு நின்றுகொண்டிருந்தனர்.

''நீங்க ட்ரசரிக்குப் போயி ஒங்களோட புரமோஷன் ஆர்டர் காப்பியக் கொடுக்கணும். மாதிரிக் கையெழுத்துப் போடணும் சார்.''

''இன்னிக்கி முடியாது. நாளக்கிக் காலையில போவலாமின்னு இருக்கன். இங்க எங்க ட்ரசரி இருக்கு?''

''ஒரத்தநாடு சார்.''

''வாங்க, போயி ட்ரசரிக்கான தபால ரெடி பண்ணலாம்'' என்று சொல்லிவிட்டு ராமநாதன் நடக்க ஆரம்பித்தார்.

தன்னுடைய அறைக்கு வந்து நாற்காலியில் உட்கார்ந்தார். ''கிளார்க்கக் கொஞ்சம் கூப்புடுங்க சார்'' என்று ராமநாதன் சொன்னார். எழுந்து சென்ற தனவேல் பக்கத்து அறையிலிருந்த கிளார்க்கை அழைத்துக்கொண்டு வந்தார்.

''நான் நாளக்கி ட்ரசரிக்குப் போவலாம்னு இருக்கன். அதுக் கான தபால்கள ரெடி பண்ண முடியுமா சார்?'' என்று ராமநாதன் கேட்டார்.

''ரெடி பண்ணி கொண்டுவர்றன் சார்'' என்று சொன்ன வேகத் திலேயே கிளார்க் தன்னுடைய அறைக்குச் சென்றுவிட்டார். தன வேல் நின்றுகொண்டிருந்தார். அவரிடம் ராமநாதன் எதுவும் பேசாததால் ''நீங்க கொஞ்சம் ரெஸ்ட் எடுங்க. அப்புறமா வர்றன்

சார்'' என்று சொல்லிவிட்டு வெளியே போனார். வெளியே போன சிறிது நேரத்திலேயே உள்ளே வந்து ''ஓங்கள ஒரு அம்மா பாக்கணும்னு வந்திருக்காங்க சார்'' என்று சொன்னார்.

''என்னெயா?'' என்று சந்தேகப்பட்டது மாதிரி ராமநாதன் கேட்டார்.

''ஆமாம் சார்.''

''பசங்க பிரச்சனயா இருந்தா நீங்களே என்னா, ஏதுன்னு விசாரிச்சி அனுப்பிடுங்க. இந்த ஸ்கூலப் பத்தி எனக்கொண்ணும் தெரியாதே'' என்று சொன்னார்.

''பாக்குறன் சார்'' என்று சொல்லிவிட்டு தனவேல் வெளியே சென்றார்.

தனவேலிடம் பள்ளிக்கூட நடைமுறைகளைப் பற்றி, ஆசிரியர் களைப் பற்றிக் கேட்கலாமா என்று ராமநாதன் யோசித்தார். முதல் நாளே எல்லா விஷயங்களைப் பற்றியும் கேட்கலாமா, அது சரியாக இருக்குமா, ஒரு வாரம் கழித்து விசாரித்துக்கொள்ள லாமா, வந்த நாளிலேயே மற்றவர்களைப் பற்றி விசாரித்தால் தவறாக நினைக்கலாம். முதலில் தனவேல் எப்படிப்பட்ட ஆள் என்று தெரிந்துகொள்வோம் என நினைத்தார். இன்றிரவு பள்ளிக் கூடத்திலேயே தங்கிவிட்டு, நாளைக் காலையிலே கருவூலத்துக் குச் சென்று பதவி உயர்வு ஆணையை, மாதிரிக் கையொப்பம் போட்ட கடிதத்தைக் கொடுத்துவிட்டு மதியமே ஊருக்குப் போய் விடலாம். சனி, ஞாயிறு கழிந்து, திங்கள்கிழமை வந்து எங்கு தங்குவது என்பதை முடிவு செய்யலாம். சுவரில் மாட்டி யிருந்த காந்தி, அம்பேத்கர், பெரியார், நேதாஜி படங்களைப் பார்த்தார். பிறகு முக்கியமான காரியத்தைச் செய்வது மாதிரி கைக்கடிகாரத்தைப் பார்த்தார். நேரத்தைத் தெரிந்துகொண்டதும் அவருடைய முகம் மாறியது. பாட்டிலை எடுத்துக் கொஞ்சம் போலத் தண்ணீரைக் குடித்தார். பிறகு ஆசிரியர் வருகைப் பதி வேட்டை எடுத்து ஒவ்வொரு ஆசிரியரின் பெயராகப் படிக்க ஆரம்பித்தார். அப்போது அறைக்குள் வந்த தனவேல், ''ஒரு அம்மா